REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 8௳ வெள்ளி (21—1—55) ★ ★ வெளியூர்: தை 9௳ சனி (22—1—55) [இதழ் 188

மலேயாவில் தமிழுக்கு முதலிடம்

சிங்கப்பூர், ஜன. 20—

மலேயாவிலும் தமிழ் மொழிக்கு முதலிடம் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்று இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியரான ரெவரண்டு டாக்டர் சேவியர், எஸ். தனிநாயகம் தமிழ் விழா கொண்டாட்ட கமிட்டியினல் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறியிருக்கிருர். மலேயா பல்கலைக் கழகத்திலும் மொழிகள் பயிற்சி இலாகா ஏற்படுமென்றும், இதில் தமிழ் மொழிக்கு முக்கியமான இடம் கிடைக்குமெனத் தெரிகிறதென்றும், இந்த இலாகா வெகு விரைவிலேயே ஆரம்பிக்கப்படுமென்றும், சீனர்களால் நடத்தப்படும் 'நன்யாங்' பல்கலைக் கழகத்திலும் இதேபோன்ற பயிற்சிகள் தரப்படக்கூடுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

75,000 பவுன் செலவில் ஆவடியில் 'தமாஷா!'

—(:)—

ரோமானிய முறையில் காங்கிரஸ் தலைவர்கள் இருப்பார்கள்!

மக்கள் கூடுவார்கள்-கலைவார்கள்—வேற்றுமைகள் அப்படியே நீடிக்கும்

அழிந்துவரும் காங்கிரசின் கையில் இந்தியாவின் எதிர்காலம்

ஆவடி காங்கிரஸ் பற்றி 'டைம்ஸ்' இதழின் கேலியும் கண்டனமும்

லண்டன், ஜன. 11—

ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டைப்பற்றி லண்டனிலிருந்து வெளியாகும் 'டைம்ஸ்' பத்திரிகை நிறைய எழுதியிருக்கிறது. "சென்னைக்கு அருகில் கூடும் அழகான கூட்டம்," என்று, 'டைம்ஸ்' குறிப்பிட்டு எழுதுவதாவது :—

"இந்த 'தமாஷா'வுக்கு என்று **75,000** பவுன்கள் (ரூ. 10 லட்சம்) செலவிடப்படுகின்றன. வறுமை நிறைந்த இந்தியா போன்ற நாட்டில், இந்தத் 'தமாஷா'வுக்காகச் செலவிடப்படும் இப்பணம் ஏராளமானதாகும்.

"இந்த மாநாட்டில், பண்டித நேரு இந்தியா பற்றி கண்டுள்ள கனவுகளைப் பற்றி கேட்பார்கள்; சிலர் பாராட்டுதலுடனும், சிலர் அலட்சியத்துடனும், சிலர் மௌனத்துடனும் கேட்பார்கள். இப்படி அவர்கள் அமைதியாகக் கேட்பது இந்தியாவுக்கே புதுமையான ஜனநாயகமாகும். இதன் காரணமாக, காங்கிரஸ் மாநாடுகள் அரசியல் துறையில் சுறுசுறுப்பின்றியே இருக்கின்றன.

"இப்படியே உணர்ச்சிகளை அடக்கி அகிம்சை முறையில் அவர்கள் வளர்ந்திருக்கிருர்கள்; எதிர்காலத்தில் இப்பண்பு எவ்வளவு தூரம் நீடிக்குமென்பது நிச்சயமற்றதேயாகும்!

"நான்கு நாட்கள் கூடிப் பேசியவுடன், காங்கிரஸ் தலைவர்கள், 'ஹாலிவுட்' போன்று அமைக்கப்பட்ட தலைவாயில் மூலமாக பகிரங்க மாநாட்டிற்குள் நுழைவார்கள். அங்கே உயரமான மேடையில் அமர்ந்து, அந்தத் தலைவர்கள், தங்கள் எதிரே அமர்ந்திருக்கும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள்—பார்வையாளர்களாகிய விவசாயிகள்—ஆகியவர்களிடம், தாங்கள் செய்திருக்கும் முடிவைப்பற்றி எடுத்துச் சொல்வார்கள்.

"பழைய காலத்தில் காணப்பட்ட ரோமானிய முறைப்படி மூன்று நாளைக்கு இப்படி பகிரங்கமாக அந்தத் தலைவர்கள் இருப்பார்கள்; பின்னர், மாநாட்டிற்கு வந்திருக்கும் விவசாயிகள், வீட்டிற்குப் போவார்கள்; ஆனல், அவர்களுக்கிடையே இருக்கும் வேற்றுமைகள் அப்படியே இருக்கும்; அதுபோலவே, கலகலத்துப்போகும் காங்கிரஸ் கட்சியின் அமைப்பும் மாருமல் அப்படியே நீடிக்கும். அப்படி பலவீனமாகிக்கொண்டிருக்கும் கட்சியை நம்பித்தான் இந்தியாவின் எதிர்காலம் இருக்கிறது."

ஓயாது பேசுகிருர்கள்

டாக்கா, ஜன. 20—

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சாமான்கள் போக்குவரவு வேண்டிய அளவுக்கு நடைபெறுவது பற்றி இந்தியாவுடன் பாகிஸ்தான் சர்க்கார் வெகு விரைவிலேயே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்குமென்றும் பாக். போக்குவரத்து அமைச்சர் டாக்டர் கான் சாகிப் தெரிவித்திருக்கிருர்.

நம்பிக்கை கொள்கிருராம்!

காஷ்மீர் பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் முகமதலி தெரிவித்திருக்கிருர்.

லண்டன் 'காமன்வெல்த்' பிரதமர்கள் மாநாட்டில் பேசும்போது அவர் மேலும், 'காஷ்மீர் பிரச்னையை தீர்த்துவைப்பதில் ஐ.நா.-வின் பொறுப்புதான் அதிகம்' என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

"தமிழில் பேசுங்கள்"

மணிபென் பட்டேலிடம் காங்கிரஸ் பக்தர்கள் கெஞ்சினர்!

'இந்தி படியுங்கள்' — அம்மையாரின் கடிந்துரை

சென்னை, ஜன. 20—

நேற்றிரவு தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில், ஆக்க வேலைகளின் அவசியம்பற்றி காங்கிரஸ் தலைவர் தேபர் பேசினராம்.

தேபருக்குப் பின்னர் திருமதி மணிபென் பட்டேல் இந்தியில் பேசினர்களாம்.

காங்கிரஸ் ஆக்க வேலை ஊழியர்களில் பெரும்பான்மையோருக்கு இந்தி தெரியாதாம்; அவர்கள், மணிபென் பட்டேலுக்கு தமிழ் தெரியும் என்பதை அறிந்து, அவரை தமிழில் பேசுமாறு கேட்டார்களாம்.

ஊழியர்களின் இக்கோரிக்கையை கண்ட மணிபென் பட்டேல் அம்மையார், மிகவும் அலட்சியமான குரலில், காங்கிரஸ் ஊழியர்கள் இந்தி மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அப்போதுதான் இந்தியாவின் ஒற்றுமை ஒங்குமென்றும் கூறி, காங்கிரஸ் தமிழ். ஊழியர்களின் கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டு, இந்தியிலேயே பேசினர்களாம்.

தமிழில் பேசுமாறு கேட்ட காங்கிரஸ் பக்தர்கள், வடநாட்டுத் தலைவர்கள் தென்னட்டுக் காங்கிரஸ் தோழர்களை மதிக்கும் போக்கைக் கண்டு வெட்கித் தலை குனிந்தார்களோ என்னவோ, நமக்குத் தெரியாது!

மதுபானங்கள் தந்து பதவி பெற்றனர்!

காங்கிரசில் ஏழைகள் ஒதுக்கித் தள்ளப்படுகின்றனர்

மின்சார இரயில் நதியில் வீழ்ந்தது

50 பேர் கொல்லப்பட்டனர்

டோக்கியோ, ஜன. 20—

நங்கானு—ஷிஜுகா மாவட்டத்தின் எல்லையிலுள்ள ஒரு இரும்புப் பாலத்தின் மேல் சென்றுகொண்டிருந்த மின்சார இரயில் வண்டி ஒன்று, தென்ரையு நதியில் விழுந்துவிட்டதாகவும், விபத்தில் 50 பேர் கொல்லப்பட்டனர் என்றும் செய்திகள் அறிவிக்கின்றன.

இந்தியாவில் முந்திரிக்கொட்டையைப் பக்குவப்படுத்தும் தொழிலில் சுமார் 50,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்து வருகிறது.

தலைவர்களே ஊழலில் உழல்கின்றனராம்

ஆவடியில் 'கனம்'களிடையே மோதுதல்—முகாரி!

'மானம் போகிறதே' என சிலர் ஓலம்!

ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் வைரவிழாக் கூட்டத்தில், காங்கிரசில் கரையான்கள் குடிபுகுந்த படலம் பற்றி பலர் விரிவாகப் பேசினர்களாம். பண்டித நேருவின் தலைமையில் வாய்மூடி மௌனிகளாக வாழ்ந்த காங்கிரசார் ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் தங்கள் மனப்போக்கை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

'ஒயின்' என்னும் அந்நிய நாட்டு மதுவைத் தந்து பீகாரில், காங்கிரஸ் டெலிகேட்டுகள் தேர்தலில் 'ஓட்டு'கள் சேகரிக்கப்பட்டதாம். மதுவிலக்குக் கொள்கைக்கு காங்கிரஸ்காரர்கள் செய்யும் சேவை எத்தன்மையது என்பது இதன் மூலமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

காங்கிரசில் ஏழைகள் ஒதுக்கித் தள்ளப்படுவதையும், பணக்காரர்களே பதவிக்கு வருவதையும் சுட்டிக்காட்டி பலர் பேசியுள்ளனர்.

"இப்படிப் பேசலாமா மக்கள் மத்தியில்—நமது மானம் பறிபோகுமே"—என்று வேறு பலர் சோகமுடன் கூறினராம்.

"பேசட்டும், பேசட்டும்; காங்கிரசில் உள்ள ஊழல்கள் அத்தனையும் எனக்குத் தெரியும்; நமது கட்சியில் உள்ள பல பெரிய மனிதர்களேகூட மாசுபட்டவர்களாகியுள்ளனர்; அவ்வாறு இல்லை என்று யாராவது கூறட்டும்—நான் சவால் விட்டுக் கேட்கிறேன்," என்ருராம், காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து விலகிய பண்டித நேரு.

"காங்கிரசில் தீவிர உறுப்பினர்களின் சந்தாத் தொகை ரூ. 10 என்று இருப்பதால், ஏழைகள், காங்கிரசில் தொண்டாற்ற இயலவில்லை; பணம் கொடுத்து காங்கிரசின் வாக்குகள் விலைக்கு வாங்கப்படுகின்றன; ரூ. 10 என்றுள்ள சந்தாத் தொகையை உடனடியாகக் குறைக்க முயல வேண்டும்," என்று அல்குராய் சாஸ்திரி என்பவர் கூறினராம்.

இப்பிரச்சினைக்குப் பண்டித நேரு பதில் அளிக்கையில், ரூ. 10 அதிகமென்றுலும், அப்படித்தான் எல்லோரிடமும் பணம் வாங்க

(4-ம் பக்கம் பார்க்க.)

கழுதை போலாகிவிட்டது காங்கிரஸ்!

மக்கள் சோஷலிஸ்டு கட்சியினர் மரமண்டையினர்!

ஆச்சாரியா வினேபா பாவே கருத்து

காரக்பூர், ஜன. 20—

"காங்கிரஸ், இன்று அதிக பாரம் ஏற்றப்பட்ட கழுதை போன்று நகர முடியாததாய் இருக்கிறது. ஒரு நேரத்தில் ஒரு காரியத்தைச் செய்ய முற்படுவதற்கு மாருக, அவர்களால் நிறைவேற்ற முடியாத ஆயிரம் திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டிருக்கிருர்கள்,"—என்று, ஆச்சாரியா வினேபா பாவே குறிப்பிட்டிருக்கிருர்.

தமக்கு வரவேற்பளித்த குழுவினர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர், "மக்கள் சோஷலிஸ்டு கட்சியினருக்கு, தலையில் மரக்கட்டைகள் இருக்கின்றன போலும்; அதனல்தான் அவர்கள் என்னுடைய பூமிதான இயக்கத்தில் சேராமலிருக்கிருர்கள்," என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

புயலுக்குப் பலி!

டோக்கியோ, ஜன. 20—

கையூஷூக்கு வடக்கிலுள்ள ஜெனுகைக் கடலில் ஏற்பட்ட திடீர் புயலின் காரணமாக இரண்டு படகுகள் கவிழ்ந்து 14 மீனவர்கள் கடலில் மூழ்கி இறந்துபட்டனராம். கடந்த 10 தினங்களுக்குள் 43 மீனவர்கள் காணப்படவில்லையென்று கூறப்படுகிறது.

1953—54-ல் சுமார் 89,76,054 ரூபாய் பெறுமானமுள்ள புத்தகங்கள் (தேசப் படங்களும், வரைபடங்களும் உட்பட) இந்தியாவில் இறக்குமதியாயின.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 21—1—1955 வெள்ளி

சொன்னதும் சொல்ல மறந்ததும்

"எட்டி நில், கிட்ட வாராதே; தொட்டுவிட்டால், உன் பாதம் இத்தெருவில் பட்டுவிட்டால் தீட்டு; நீ தீண்டப்படாதவன்," என்று ஒதுக்கப்படும் நிலையில் மனிதர்களில் சிலர் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

"நான் உன்னிலும் உயர்ந்தவன்; நீ என்னிலும் தாழ்ந்தவன் — பிறப்பால்," என்று கூறிடும் பேதமை நிலவுகிறது நாட்டில்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவன் வகுத்திருந்த வாழ்வு முறை அழிக்கப்பட்டுவிட்டது; 'ஒரு குலத்துக்கொரு நீதி' கற்பிக்கும் மனு முறை நிலைபெற்றிருக்கிறது.

'ஒன்றே குலம்' என்று மக்கள் வாழ்ந்திருந்த நிலை மாறி, 'ஆயிரம் உண்டிங்கு சாதி' எனும் நிலை வளர்ந்துள்ளது.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற நீதி மறைந்து, ஒரு சிலருக்கே, 'உயர்குடி' பிறந்தோருக்கே எல்லாம் எனும் அநீதி தலைதூக்கி நிற்கிறது.

'உழைப்பவர் ஒருவர்; உழைப்பின் விளைவுகளை அனுபவிப்பவர் வேறொருவர்,' என்ற நிலை காட்சி தருகிறது.

இந்நிலைகள் மாற வேண்டாமா? மாற்றப்பட வேண்டாமா?—என்று கேட்டு வருபவர்கள் நாம், பல ஆண்டுக் காலமாய்!

ஆனால், இந்தக் கேள்விகளுக்குப் பதிலாக நமக்குக் கிடைத்ததெல்லாம் 'வகுப்புவாதிகள்,' 'பார்ப்பனத் துவேஷிகள்' என்ற பட்டப் பெயர் தான்!

ஆனால், இன்று சமூகத்தில் நிலவும் அநீதிகளை, ஏற்றத்தாழ்வுகளை, ஒருசிலருக்கே எல்லா உரிமையும் வாய்ப்பும் என்ற நிலைமைகளை எல்லாம், காங்கிரஸ்காரர்கள், நாட்டை ஆளும் நல்வாய்ப்புப் பெற்ற இருவர் சாடியிருக்கின்றனர்.

"சகல உரிமைகளையும் பெற்றுள்ள நிலையிலிருக்கும் ஒரு சிலர் அந்த நிலையிலேயே ஒட்டிக்கொண்டிருக்க விழைந்தால் நாட்டில் மோதுதல்கள் தவிர்க்க முடியாதனவாகிவிடும்."

"சமுதாய பொருளாதாரத்துறைகளில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டாலன்றி நாட்டில் அமைதி இருக்க முடியாது."

இவ்வாறு, சென்னை முதலமைச்சர் காமராசர், ராஜாஜி மண்டபத்தில் இரண்டு தினம் முன்பு நடைபெற்ற க்ஷேம நல விஸ்தரிப்புத் திட்டங்களை அமுல் நடத்துவோர் மாநாட்டினை துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"சமூக அநீதி, ஏற்றத் தாழ்வு, தீய சமூகப் பழக்கங்கள் இவற்றை ஒழிக்க சர்க்கார் முன்வர வேண்டும்,"

என்று, இந்தியப் பேரரசின் முன்னாள் மந்திரியான என். வி. காட்கில் மராத்திய சமூக சீர்திருத்த மாநாடு, பூனா - ஜலசான் நகரில் அண்மையில் நடைபெற்றபோது தமது தலைமையுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சமூக அநீதி, ஏற்றத் தாழ்வுகள், ஒரு சிலருக்கே சகல வாய்ப்புகள் உரிமைகள்-ஆகிய அவல நிலைகள் மாற்றப்பட வேண்டுமென அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

சமூகத்தில் அநீதியும், ஏற்றத் தாழ்வும் நிலவுகின்றன என்ற உண்மையைக் கண்டு, அவற்றைப் பகிரங்கமாக எடுத்துக் காட்டி, 'அந்த அவல நிலை அழிந்துபட வேண்டும்,' என்றும் பேசியிருக்கின்றனர். ஆனால், 'அந்த அவல நிலை அழிய வேண்டும்,' என்று பேசும் அவர்கள், அந்த நிலை இந்தப் பூமியிலே எப்படி ஏற்பட்டது என்று கூற மட்டும் மறந்துவிட்டனர்.

அந்த அவல நிலையின் வெளித் தோற்றத்தை—கோர உருவத்தை எடுத்துக்காட்டி, 'அவைகள் அழிய வேண்டும்' என்று கூறினரேயன்றி, அந்த அவல நிலை எதன் பிரதிபலிப்பு, எதை உள்ளடக்கிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையைக் கூருது விடுத்துள்ளனர்.

மேலும், அந்த அவல நிலை அழிய—அவல நிலைகள் தோன்றுவதற்கு மூல காரணமாயிருந்த தோற்றுவாய்கள் அழிய எந்த நடைமுறையைக் கையாள வேண்டுமென்றும் அவர்கள் சொல்லவில்லை.

அவர்கள் கூறியுள்ள அந்த அவல நிலை, இந்த நாட்டில் நிலவுவதற்கான மூல காரணத்தை நாம் கூறிவந்திருக்கிறோம்—எண்ணற்ற எதிர்ப்புகளையும், ஏற்றங்கொண்டோரின் ஏளனங்களையும், அதிகாரம் படைத்தோரின் அடக்குமுறை கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு!

மனுவும் மாந்தாதாவும் வகுத்துச் சென்ற சமூக நீதி—பிறப்பாலேயே மனிதர்களிடை உயர்ந்தவர்-தாழ்ந்தவர் என்ற பேதம் கற்பித்து, உயர்ந்தவர் உழைக்காமலிருக்கவும் - தாழ்ந்தவர் உழைத்துத் தரவும், அவர் உயரவும்-இவர் தாழவும், அவர் வாழவும்—இவர் வீழவும் ஆன நிலைகளை உருவாக்கிய வருணாச்சிரம முறை, அந்த முறை கற்பிக்கும் 'ஆயிரமுண்டிங்கு சாதி' எனும் நிலை ஆகாது—கூடாது என்று கூறிவந்திருக்கிறோம்.

உயர்ந்தவன் — தாழ்ந்தவன் என்ற சமூக அநீதி, ஏற்றத் தாழ்வு ஆகியவை அழிந்துபட, உயர்ந்தவர்களாய் இருப்போருக்கே எல்லா வாய்ப்பும் வசதியும்—தாழ்ந்தோருக்கு அவை இல்லை எனும் நிலையும் நீங்க, இந்த உயர்வு—தாழ்வைக் கற்பிக்கும் சமுதாயச் சட்டம் உடைத்தெறியப்பட வேண்டாமா?

'எல்லோரும் ஓர் குலம்' என்ற நிலை பிறக்க, புதுமை மலர, சமத்துவம் நிலைபெற, இவர் பார்ப்பனர்—ஆகவே உயர்ந்தவர்; இவர் சூத்திரர்—எனவே தாழ்ந்தவர் என்ற ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கும் வர்ணாச்சிரம முறை தகர்த்தெறியப்பட வேண்டாமா?—என்று கேட்டு வந்திருக்கிறோம்—இன்றும் கேட்டு வருகிறோம்.

அவர்கள், வருணாச்சிரமம் எனும் சமூகச் சட்டத்தின் விளைவுகளை மட்டும் சொல்லி, அந்த விளைவுகளின் உருவங்களாயிருக்கிற அநீதிகள் அழிந்துபட வேண்டும் என்று கூறியுள்ளனர்.

நாம், வருணாச்சிரம முறையே அழிய வேண்டும் என்று கூறுகிறோம்.

நச்சு மரத்தின் நச்சுக் கனிகளைக் காட்டி—இக்கனிகள் கூடாது — ஆகாது — என்று மட்டும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

நாம், அக்கனிகள் பழுத்துக் குலுங்கும் அந்த நச்சு மரமே அழிய வேண்டும் என்று கூறுகிறோம்.

"ஒரு சிலருக்கே எல்லா வாய்ப்பும் என்கிற நிலை மாற வேண்டும்; பிறருக்கும் சந்தர்ப்பம் அளிக்க, ஏற்கனவே எல்லா உரிமைகளும் பெற்று வாழ்பவர்கள் விட்டுக்கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் நாட்டில் மோதுதல்கள் தவிர்க்க முடியாதனவாகிவிடும்"—என்று கூறியிருக்கிறார், காமராசர்.

சந்தர்ப்பங்களின்றி, வாழ்க்கைப் பெற வாய்ப்புகளின்றி தவிப்போருக்கு, எல்லா வாய்ப்பும் பெற்று வளமுற வாழும் ஒரு 'சிலர்' விட்டுக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பது ஏமாற்றத்தையே தரும் என்றுதான் இந்த நாட்டின் கடந்த கால நிகழ்ச்சிகள் கூறுகின்றன.

வகுப்புவாரி உரிமைச் சட்டத்தின் வரலாறே இதற்குப் போதுமான சான்றாகும். 'மயிலே, மயிலே இறகுபோடு' என்றால், போடுமா?

அதைப் போலவே, முன்னாள் மந்திரி காட்கில் அவர்கள், சமூக அநீதிகள் அழியவேண்டுமென்றும், அரிசனங்களுக்கென்று சேரிகள் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலை அழிய வேண்டுமென்றும், ஏற்றத் தாழ்வுகள் நீங்க வேண்டுமென்றும் பேசியிருக்கிறார்.

'தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதி என்று ஒதுக்குவது கூடாது—அந்த ஒதுக்கப்பட்ட பகுதிகளை அழித்துவிட வேண்டும்,' என்பதுவே ஏற்றத் தாழ்வுகளைச் சமனாக்குவதற்குப் பரிகாரமாகிவிட முடியுமா?

இருவரும் அநீதிகளைச் சாடுகின்றனர்; ஆனால், அந்த அநீதிகளின் தோற்றுவாய் எது என்பதைக் கூறுவதற்கு மறந்துவிட்டனர்.

அந்த அநீதிகளின் பிறப்பிடம்-தோற்றுவாய்தான் ஆரியம்—பார்ப்பனீயம் என்பதையும், அவைகள் அழிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்கள் சொல்லியிருக்க வேண்டும்; ஆனால், சொல்ல மறந்துவிட்டனர்!

இராமநாதபுரத்தில் 250 - பள்ளிகள்

விருதுநகர்—

படித்தும் வேலையற்றுக் கிடப்போருக்கு வேலை தருவதற்கான இந்திய சர்க்காரின் திட்டப்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் வெகுவிரைவில் மேலும் 250 - பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும் என்று தெரியவருகிறது.

பட்டம் ஆட்சி கவிழாமல் கம்யூனிஸ்டுகள் பாதுகாப்பார்கள்!

அரசியல் கைதிகளை விடுவிக்கக் கம்யூனிஸ்டுகள் ஒப்பந்தம் செய்கிறார்களாம்!

திரு-கொச்சி அரசியலில் விசித்திர நிலைமை

திருவனந்தபுரம், ஜன. 19—

திருவாங்கூரில் உள்ள அடக்குமுறை ஆட்சி நடத்தும் பட்டம் தாணுவின் சர்க்கார் கவிழ்ந்து போகாமால் இருக்க திரு-கொச்சி கம்யூனிஸ்டுகள் உதவி செய்வார்கள் என்று சொல்லப்படுகிறது.

பி. சோ. கட்சியினருக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்று ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.

அடுத்து, திரு-கொச்சி சட்டசபை இம்மாதம் 25-ந் தேதி கூட இருக்கிறது. அக்கூட்டத்தில் கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் பட்டம் மந்திரி சபையை ஆதரித்து வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கம்யூனிஸ்டுகள் தரும் ஆதரவுக்குப் பதிலாக, பட்டம் தாணு பிள்ளை, கம்யூனிஸ்டு கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும், போலீசாரின் அடக்குமுறையைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்றும், நிலச் சீர்திருத்தத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்றும் 'வாய் மூல ஒப்பந்தமாக' இருதரப்பாருக்கிடையேயும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதாம்.

திரு—கொச்சி புரட்சி சோஷலிஸ்டு கட்சித் தலைவர் ஸ்ரீகண்டன் நாயர், பி.-சோ. கட்சிக்கும்—கம்யூனிஸ்டு கட்சிக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ய தூது செல்கிறார் என்று தெரிகிறது.

சட்டசபையில் ராஜப்பிரமுகரின் நன்றியறிவிப்பு பிரரேபணைக்கு இடதுசாரிகள் கொண்டுவரும் திருத்தத்தை பட்டம் மந்திரி சபை ஏற்குமாம்.

ஏழாண்டுகளுக்கு முன்னர் திவான் ஆட்சியின் கொடுமையால் சிறை வைக்கப்பட்ட அரசியல் கைதிகளை விடுவிக்க திருத்தம் ஒன்று கொண்டுவரப்படுமாம்.

31 உறுப்பினர்களை கொண்ட கம்யூனிஸ்டு ஐக்கிய முன்னணியின் தலைவர் டி. வி. தாமஸ், பட்டம் தாணுப் பிள்ளையுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தினாராம்.

ராஜப்பிரமுகரின் உரைக்கு எதிராக 46 காங்கிரஸ் உறுப்பினர்களும் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடதுசாரி கூட்டு மந்திரி சபை அமைக்கக் கம்யூனிஸ்டுகள் செய்யும் முயற்சி கைவிடப்படுமாம்; புதிய ஒப்பந்தம் அதற்கு வழி செய்யுமாம்.

117 உறுப்பினர்களைக் கொண்ட திரு—கொச்சி சட்டசபையில் உள்ள கட்சிகளின் நிலைமை பின் வருமாறு:—

காங்கிரஸ்	46
பி.-சோ. கட்சி	18
ஐக்கிய முன்னணி	31
புரட்சி சோஷலிஸ்டுகள்	9
தி. த. நா. கா.	12
சுயேச்சை	1

திருந்திய திருடர்கள்

உழைத்து வாழ்கிறார்களாம்!

மேற்கு வங்கத் தலைநகரான கல்கத்தாவில் பல தந்திரங்களைக் கையாண்டு கொள்ளைக்காரர்களாக இருந்தவர்கள் இப்போது தங்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு உழைத்து வாழ முற்பட்டு விட்டதாக அரசாங்கம் கூறுகிறது.

என்றாலும், இந்தத் திருடர்களை ஒழிப்பதில் இன்னும் போலீசார் கவனத்துடனேயே இருந்துவருகின்றனர்.

பர்ரா பஜார் தெருவில் இன்னும், இந்த திருடர்கள் கூலிகளைப் போல் அலைந்துகொண்டிருப்பதாயும், யாராவது ஏமாந்தவர்களிடம், சாமான்களைத் தூக்கி வருபவர்களைப்போல் நடித்து அவர்களிடம் சாமான்களை வாங்கிக்கொண்டு, சாமான்காரர்கள் கவனக் குறைவாக இருக்கும்போது, சாமான்களுடன் அத்திருடர்கள் மறைந்துவிடுவதாகக் கூறப்படுகிறது.

திருமணச் செலவுகள்

அரசாங்கம் நிபந்தனை.

மீறுவோருக்கு தண்டனை

மேற்கு பஞ்சாப் மாநிலத்தில் திருமணம், விழாக்கள் இவைகளின்போது இவ்வளவுதான் பணம் செலவு செய்யலாம் என்ற நிர்ணயம் செய்யப்படலாமெனத் தெரிகிறது.

ஒவ்வொரு திருமணத்தின் போதும் ரூ. 1,000 மட்டுமே செலவிடலாம் என்றும், திருமணத்தின் போது, சுமார் 50 பேர்களுக்கு மட்டுமே விருந்தளிக்கப்படலாமென்றும், திருமணவிழா இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்கக்கூடாது என்றும் சர்க்கார் வெளியிட்டுள்ள நகல் மசோதா குறிப்பொன்று கூறுகிறது.

இந்த நிபந்தனைகளை மீறுவோர் ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படலாமாம்.

குடியரசு தினத்தில் விவசாயிகளுக்கு வசதி

கிராமங்களுக்கு ரூ. 25 கோடி செலவில் மின்சார விஸ்தரிப்பு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் மத்தியப் பிரதேசம் முழுமையும் மின்சார வசதிகள் அமைக்கப்பட்டுவிடும் என்றும், இதற்காக ரூ. 25 கோடி செலவிடப்படும் என்றும் மத்திய பிரதேச நிதி அமைச்சர் பிரிஜ்லால் பியானி நிருபர்களிடையே கூறியுள்ளார்.

1956 மார்ச்சுக்குள் 10,000 மக்களுக்கு மேல் உள்ள 37 நகரங்களுக்கு மின்சார வசதிகள் நீடிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த திட்டத்தை நிறைவேற்ற மத்திய சர்க்கார், மத்தியப் பிரதேச சர்க்காருக்கு ரூ. 135 லட்சம் கடன் அளித்திருக்கிறதாம்.

இப்போது வருகிற குடியரசு தினத்தன்று, மேலும் 28 கிராமங்கள் மின்சார வசதிகளைப் பெறும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

கிராமங்களுக்கு விவசாய வசதிகளை அதிகரிக்க மத்திய சர்க்கார் ரூ. 380 லட்சம் பெறுமான திட்டமொன்றைத் தீட்டியிருக்கிறதாம். இத்திட்டத்திற்கு மத்திய சர்க்காரின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறதாம்.

காசநோயின் கொடுமை

ஆண்டுதோறும் மூவாயிரம் பேர் மரணம்

மத்தியப் பிரதேசத்தில் ஆண்டுதோறும் 50,000 மக்கள் காசநோயால் பீடிக்கப்படுகிறார்களாம். ஆண்டு தோறும் இந்த கொடிய நோய்க்கு இரையாகி 3,000 பேர் மாண்டு போகிறார்களாம்.

கைத்தறித் துணி விற்பனை

★

சென்னை :

9—1—55ல், 4-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில், கழக நிலையத்திலிருந்து தோழர் ஏ. எம். முத்தையா தலைமையில் தோழர்கள் வீதி தோறும் சென்று ரூ. 500-க்கு கைத்தறித் துணி விற்பனை செய்தனர்.

* * *

9—1—55ல், 7-வது வட்ட தி. மு. கிளைக் கழகச் சார்பில், தோழர் வே. வ. வேந்தன் தலைமையில், தோழர்கள் பலர் கைத்தறித் துணிகளை வண்டியிலேற்றி தெருத் தெருவாகச் சென்று சுமார் ரூ. 250-க்கு விற்பனை செய்தனர்.

* * *

9-1-55—13-1-55 வரை, தினமும் காலை மாலையில் ஆலந்தூர் தி. மு. கழகத் தோழர்கள், தோழர் மு. தங்கவேலு தலைமையில், தி. மு. கழகச் சார்பில் தோழர்கள் கைத்தறித் துணி விற்பனை செய்தனர். மொத்தம் ரூ. 626-8-0க்கு விற்பனை செய்யப்பட்டது.

* * *

10, 12—1—55 ஆகிய இரண்டு நாட்களிலும் திருவொற்றியூர் தி. மு. கழகத் தோழர்கள், தோழர் நமசிவாயம் தலைமையில் ரூ. 227-7-6க்கு கைத்தறித் துணி விற்பனை செய்தனர்.

ச. வி. நகரம் :

10—1—55ல் இவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள் ரூ. 88-7-6-க்கு கைத்தறி துணிகள் விற்பனை செய்தனர்.

சூலூர் :

11—1—55 முதல் 15—1—55 முடிய சூலூரில் கழகத் தோழர்களால் கைத்தறியாளர் ஆதரவு வாரம் கொண்டாடப்பட்டது. கழகத் தோழர்கள், சில கூட்டுறவுக் கைத்தறியாளர் சங்கச் சார்பிலும் மொத்தம் ரூ. 1249-7-0-க்கு கைத்தறி துணி விற்பனை செய்யப்பட்டது.

எழுமலை :

13—1—55 காலை 9 மணியிலிருந்து பகல் 1 மணி வரை, தோழர் கே. சுப்பையா தலைமையில் கழகத் தோழர்கள் அனைவரும், கைத்தறியாடைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று ரூ. 24-13-0-க்கு விற்பனை செய்தார்கள்.

குன்றை :

12—1—55ல் தி. மு. கழகத் தோழர்களால் ரூ. 398-14-9க்கு கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டது.

முல்லைவாங்கல் :

12—1—55 காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை, கைத்தறித் துணிகளை வண்டியில் ஏற்றிக் கொண்டு தி. மு. கழகத் தோழர்கள் ரூ. 295-10-5க்கு விற்பனை செய்தனர்.

கோசுர் :

9—1—55ல் தி. மு. கழகத் தோழர்களால், ரூ. 151-2-9-க்கு கைத்தறித் துணி விற்பனை செய்யப்பட்டது.

திருப்பரங்குன்றம் :

13—1—55ல் திராவிடர் பகுத்தறிவு மன்றச் சார்பில் தோழர் இரா. சு. அரசுக்கண்ணன் தலைமையில் தோழர்கள் பலர் சுமார் ரூ. 400-0-0-க்கு கைத்தறி துணி விற்பனை செய்தனர்.

பெத்தநாய்க்கன் பாளையம் :

12—1—55 மாலையில் தோழர் சி. பழனிமுத்து தலைமையில் கழகத் தோழர்களனைவரும் கைத்தறி துணிகளை வண்டியில் ஏற்றிச் சென்று சுமார் ரூ. 700-க்கு விற்பனை செய்தனர்.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

சென்னை :

14—1—55-ல் 42-வது வட்ட திருவல்லிக்கேணி தி. மு. கழகக் கிளையின் சார்பில், கழகப் பணிமனையில் சிறுவர்களுக்கும், பல உறுப்பினர்களுக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. 'நமது விழா' என்பது பற்றி பலர் சொற்பொழிவாற்றினர்.

* * *

16—1—55 காலை 10 மணிக்கு, திருவொற்றியூர் தி. மு. கழக இல்லத்தில், தோழர் கண்ணதாசன் முன்னிலையில் பொது மக்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

* * *

ஆலந்தூர் தி. மு. கழகச் சார்பில், திராவிடர் திருநாளும், மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவும் 16—1—55 மாலை 5-30 முதல், இரவு 10-30 மணிவரை தோழர் கே. எஸ். அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், ஆர். எஸ். பாண்டியன், கண்ணதாசன் ஆகியோருக்கு கழகச் சார்பில் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டன. தோழர்கள் இரா. கோதண்டராமன், வி. ராசு, ராசன் ஆகியோர் பேசிய பின், தோழர்கள் ஆர். எஸ். பாண்டியன், வி. எஸ். கோவிந்தராசன், கண்ணதாசன் ஆகியோர் கழகக் குறிக்கோள் பற்றியும், அரசியலாரின் புதிய நாடகச் சட்டத்தைக் கண்டித்தும், இராமாயணத்தில் உள்ள ஆபாசங்களை விளக்கியும் பேசினர். பின்னர், தோழர் முத்து குமாரசாமி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், பரங்கிமலை இரயில் நிலையத்தில், ஆலந்தூர், ஆதம்பாக்கம் ஆகிய ஊர்களுக்குச் செல்லுவோருக்குப் புரிந்துகொள்ளும்படியாக அறிவிப்புப் பலகைகள் போடுமாறு கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடலூர் :

கடலூர் தி. மு. கழகச் சார்பில் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

14—1—55 காலை 10 மணிக்கு திருப்பாப்புலியூர் நகர கழகக் கட்டிடத்தில் கட்டுரைப் போட்டியும், சித்திரப் போட்டியும்; மாலை 5 மணிக்கு பேச்சுப் போட்டியும் நடைபெற்றன.

15—1—55 காலை 9 மணிக்கு, நியூ சினிமா தியேட்டரில் தோழர் இரா. பாலகுருசாமி தலைமையில் தோழர்கள். இரா. நெடுஞ்செழியன், டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியவர் சொற்பொழிவாற்றினர்; மாலை 4 மணிக்கு கடலூர் ஓ. டி. செல்லம் திடலுக்கு அருகாமையில் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் தலைமையில் மல்யுத்தப் போட்டிகள் நடைபெற்றன.

16—1—55 காலை 9 மணிக்கு நியூ சினிமா தியேட்டரில் தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், திருக்குறள் முனுசாமி, எம்.பி., தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசினர்.

17—1—55 மாலை 7 மணிக்கு மஞ்சை நகர் மைதானத்தில் தோழர் சித்தார்த்தன் தலைமையில் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அ. பொன்னம்பலனார், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்; அவருக்குப் பல கழகங்கள் சார்பில் கைத்தறித் துண்டுகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

இக்கூட்ட ஆரம்பத்தில் தோழர் நித்தியானந்தம் (நடிகர்) பாடல்கள் பாடினர்.

சூலூர் :

15—1—55 மாலை 5 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் எஸ். என். அற்புதசாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் கோவை சுந்தரராசனார், கே. வணங்காமுடி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

துத்திக்குளம் :

அண்ணா நாடகக் குழுவினரால், 14—1—55 இரவு 10 மணிக்கு தோழர் மு. கருணாநிதி தீட்டிய "நச்சுக்கோப்பை" நாடகம் புதிய கருத்துக்களுடன் 'இலட்சியவாதி' என்ற பெயரில் இலவசமாக நடித்துக் காண்பிக்கப்பட்டது.

குளித்தலை :

16—1—55 மாலை 5 மணிக்கு, மஜீத் பாண்டியன் மன்ற அலுவலகத்தில், தோழர் இரா. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர் தி. வீ. முத்துகிருஷ்ணன் மறைந்த வீரன் குமாரவேல் படத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர், தோழர் ஏகாம்பரனார் 'பொங்கல் விழா' என்பதுபற்றி விரிவுரையாற்றினர்.

பண்டாரவிளை :

14—1—55 காலை 9 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் பொங்கல் விழாக் கூட்டம் நடைபெற்றது. கழகத்தில் கொடியேற்றப்பட்டது. மாலை 3½ மணிக்கு சிறுவர்களின் விளையாட்டுப் போட்டியும், பின்னர் பரிசளித்தலும் நடைபெற்றது.

கிளிமங்கலம் :

14—1—55-ல், திரு. வி. க. நூல்நிலையத்தின் சார்பில் தோழர் ப. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில் தோழர்கள் க. முருகேசன், மா. முத்தழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அகரம் :

15—1—55ல், கழகச் சார்பில், தோழர் மா. மணி தலைமையில் விழா சிறப்புற நடைபெற்றது. அன்று மாலை 4½ மணிக்கு, கனியல், சிலம்ப விளையாட்டும், தரை விளையாட்டும் நடைபெற்றது. இரவு 8-மணிக்கு நடைபெற்ற விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் மா. ராசபாண்டியன், ல. பால்பாண்டியன், பி. சுந்தரம், நா. பொன்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னையில் திராவிடர் திருநாள்: நிகழ்ச்சி விவரங்கள்

14—1—55 பொங்கலன்று, சென்னை மாவட்ட தி. மு. கழகத்தார் வெகு விமரிசையாக நடத்திய திராவிடர் திருநாள் விழாவில் பலவகைப் போட்டிகளும், இசை நிகழ்ச்சிகளும் நடந்தன என்று ஏற்கனவே செய்தி வெளிவந்தது.

போட்டிகளில் முதற்பரிசு பெற்றவர்களுக்கு கழகச் சொற்பொழிவாளர்கள் அளித்த வெள்ளிக் கோப்பைகளும், இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு வெள்ளி பதக்கங்களும், பொதுச் செயலாளர் அண்ணா அவர்களால் வழங்கப் பெற்றன.

எழும்பூர் அழகிரி திடலில் நடைபெற்ற விழாவிற்கு சென்னை மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி தலைமை வகித்தார்.

பரிசுகளை வழங்கியதும் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் சிறிது நேரம் பேசியதும் மாவட்டச் செயலாளர் தோழர் கண்ணபிரான் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

நாடகப் போட்டியில் கலந்து கொண்ட நாடகங்கள் :—

"பக்தி"—1-வது வட்ட தி. மு. கழகம்.

"இரத்தக் கண்ணீர்"—6-வது வட்ட தி. மு. கழகம்.

"குடும்பத்திலே ஒரு நாள்"—10-வது வட்ட தி. மு. கழகம்.

"எப்படி மாறிவிட்டார்"—11-வது வட்ட தி. மு. கழகம்.

"பலிபீடம்"—18-வது வட்ட தி. மு. கழகம்.

"சரியா? தப்பா?"—50-வது வட்ட தி. மு. கழகம்.

இந்த நாடகப் போட்டிகளுக்கு நீதிபதிகளாயிருந்தவர்கள் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், கே. கோவிந்தசாமி, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆகிய நால்வருமாவர்.

இந்த நாடகங்களில் "குடும்பத்தில் ஒரு நாள்" என்ற 10-வது வட்டத்தைச் சார்ந்த 10-வயதுக் குட்டப்ட்ட சிறுவர்—சிறுமியர் நடித்த நாடகமே முதற்பரிசு பெற்றது. அந்த இளஞ் சிறுவர்களின் தரம் மிகுந்த நடிப்பு பலரின் உள்ளத்தைக் கவர்ந்தது.

அந்த நாடகத்தை எழுதி பயிற்றுவித்தவர் தோழர் கே. எம். கண்ணபிரான் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து, சிறந்த நடிகர் என்று முதற் பரிசு பெற்றவர் 6-வது வட்டத்தைச் சேர்ந்த கேசவன் என்ற தோழர்; அவரது 'ரத்தக்கண்ணீர்' நடிப்பு தத்ரூபம்.

3 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் அழகுப் போட்டியில் தோழர் டி. வி. நாராயணசாமியின் முத்துமாணிக்கம் என்ற குழந்தை முதற்பரிசு பெற்றது. இந்தப் போட்டியில் பல குழந்தைகள் கலந்துகொண்டன.

6-வயதுக்குட்பட்ட சிறுவர்களின் சித்திரப் போட்டியில் இந்திராணி என்ற சிறுமியின் சித்திரத்திற்கு முதற் பரிசு தரப்பட்டது. இந்த போட்டிக்கு நீதிபதிகளாக தோழர்கள் இரா. செழியன், என். வி. நடராசன், அ. பொன்னம்பலனார், ஏ. கே. சாமி ஆகியோர் இருந்தனர்.

விளையாட்டுப் போட்டிகளில் பரிசு பெற்றோர் விவரம் கீழே தரப்படுகிறது. இந்தப் போட்டியில் நீதிபதிகளாகப் பணியாற்றியவர்கள் தோழர்கள் காஞ்சி-மணிமொழியார், ஏ.ஆர்.சேஷாசலம், சி. ஆர். பாலசுந்தரம், சி. பஞ்சாட்சரம், இளமாறன், மோகன், ஜெயராம் ஆகியோராகும்.

சொற்பொழிவாளர்களின் கயிறிழுப்புச் சண்டைக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் நீதிபதியாக இருந்தார்.

நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளும் அவற்றில் பரிசு பெற்றோரும் :—

ஒரு மைல் ஓட்டம்

ஜே. பி. ஆனவந்தார்—முதற் பரிசு ; ஜே. சி. ஜேம்ஸ்—2-வது பரிசு.

அரை மைல் ஓட்டம்

கே. பெலிக்ஸ்—முதற் பரிசு ; ஜே. சி. ஜேம்ஸ்—2-வது பரிசு.

ஒரு மைல் வேக சைக்கிள்

கனகசபை—முதற் பரிசு ; முத்து—2-வது பரிசு.

மெதுவாக சைக்கிள் விடுதல்

டி. வெங்கடேசன்—முதற்பரிசு; அயத்பாஷா—2-வது பரிசு.

கோணிப் பந்தயம்

எல். முருகேசன்—முதற் பரிசு; முத்து—2-வது பரிசு.

இரும்பு குண்டு எறிதல்

திருநாவுக்கரசு—முதற் பரிசு; பொன்முடி—2-வது பரிசு.

கயிறு இழுப்புச் சண்டை

டி. வி. நாராயணசாமி குழுவினர்.

கைத்தறி கிராமத் தொழில் அபிவிருத்தி

இந்திய சர்க்கார் அளித்துள்ள மொத்த நிதி விவரம்

1954—55-ம் நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாத காலத்தில், மத்திய சர்க்கார், காதி, கைத்தறி, சிறு கைத்தொழில்கள், கிராமத் தொழில்கள், கைவேலைப் பொருள்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக, சகாயத் தொகையாக மொத்தம் ரூ. 2,26,37,300-ம், கடனுதவியாக மொத்தம் ரூ. 4,75,68,890-ம் வழங்கியுள்ளனர்.

அது தவிர, திருப்பித் தரப்பட வேண்டிய அடிப்படையில், அகில இந்திய காதி—கிராமத் தொழில்கள் போர்டுக்கு முன்பணமாக 1 கோடி ரூபாயும் கொடுத்துள்ளனர்.

தர்மபுரி :

15—1—55ல் தி. மு. கிளைக் கழகத்தில், தோழர் டி. வி. கோபால் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் குட்டியப்பன் சொற்பொழிவாற்றினர்.

மூணூர் :

14—1—55 காலை 6 மணிக்கு கழகத் தோழர்கள் சோலைமலைக்குச் சென்று, அங்கே, தோழர் சோ. இராமலிங்கனார் தலைமையில், தோழர் எஸ். கே. துரைச்சாமி கழகக் கொடியேற்றினர். அங்குள்ள சிறுவர்களுக்கு இனிப்பும், பொங்கலும் வழங்கப்பட்டது. அன்று மாலை 4½ மணிக்கு மூணூர் நகரில், டி. எம். நாயர் திடலில், தோழர் மு. செல்லையா தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கே. எஸ். சிதம்பரனார், அருட்சோழன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கோசுர் :

14—1—55 மாலை தி. மு. கழகச் சார்பில், விழா பொதுக்கூட்டம் தோழர் பி. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. ஜம்பு, ஆர். தேவராசன் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

தளவாய்புரம் :

14—1—55 காலை 6 மணியிலிருந்து இசைத் தட்டுகள் முழங்க விமரிசையாக விழா நடைபெற்றது. பல பெரியோர்கள் சொற்பொழிவாற்றினர். பொது மக்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. அன்று மாலை 3½ மணியிலிருந்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இரவு 8 மணியளவில் தோழர் இரா. கிருட்டிணன் தலைமையில் தோழர் ஆறுமுகபெருமாள் அவர்கள் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். தோழர்கள் கோ. ஆதிநாராயணன், தா. சங்கரலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கர்நூல் :

14—1—55 காலை 9 மணியளவில், அரசினர் ஊழியர் முகாமில், தோழர் பி. எஸ். எத்திராசன் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர் கே. எஸ். ஆர். கே. பிள்ளை மலையாளத்திலும், தோழர் பார்த்தசாரதி தெலுங்கிலும் பேசியபின், தோழர்கள் காசை சி. புவியரசு, இதயத்தோழன் ஆகியோர் பண்டைத் தமிழகத்தின் பெருமை குறித்தும் சங்க இலக்கியங்களிலிருந்து சான்றுகள்காட்டி விளக்க உரையாற்றினர். கூட்ட முடிவில் 'பாரதிதாசனார் கவிதை' அரங்கு. அதற்குப் பின் கழகத் தோழர்கட்கு சிறந்ததோர் விருந்தளிக்கப்பட்டது.

சேலம் :

15—1—55ல், குகை கிளைக் கழகத்தின் சார்பில், தோழர் பெரியசாமி தலைமையில் நடைபெற்ற விழா கூட்டத்தில், தோழர் விருதை க. இராமசாமி 'கலையும் பொங்கல் விழாவும்' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர்.

மதுபானங்கள் தந்து.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்றும், ஒரு சிலரிடம் ஆயிரக்கணக்கில் நன்கொடை வாங்குவது நலம் என்றும், ஆனால், அப்படி சிலரிடம் கைநீட்டி அதிகத் தொகைகளை நன்கொடையாகப் பெற்றால், பின்னர் அவர்கள் இயக்கத்தில் தலையிடுவார்கள் என்றும் குறிப்பிட்டாராம்.

காங்கிரசைச் சூழ்ந்து நிற்கும் ஒழுக்கக் கேடுகளை அகற்ற வேண்டுமென்றும், காங்கிரஸ்காரர்களிடையே மலிந்துகிடக்கும் லஞ்சம், பிளவு மனப்பான்மை, பதவிப் போட்டி ஆகியவற்றை ஒழித்து காங்கிரசைப் புனிதமானதாகச் செய்ய வேண்டும் என்றும் ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற இருக்கிறது.

"சுயநலக்காரர்களும், பதவிப் பித்தர்களும் நிறைந்து காணப்படும் காங்கிரஸ் இயக்கத்தைப் புனிதமாக்க வேண்டும்" என்று விஷயாலோசனை குழுவில் தீர்மானம் ஒன்றை பம்பாய் முதல்வர் மொரார்ஜி தேசாய் பிரரேபித்தார்.

காங்கிரஸ் இயக்கத்தில் கருத்து வேற்றுமைகளும், பதவிச் சண்டைகளும் மலிந்துகிடப்பது நன்கு தெரிகிறது; இதுபோன்ற ஒழுக்கக் குறைபாடுகள் மலிந்து காணப்பட்டால் காங்கிரஸ் இயக்கம் மக்களிடையே மதிப்பை இழந்துவிடும்; எனவே, காங்கிரஸ் காரியக் கமிட்டி இதுபோன்ற தீமைகளை அகற்ற கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் அத்தீர்மானத்தின் அடிப்படைக் கருத்தாகும்.

இத்தீர்மானத்தை முன்மொழிந்த தேசாய், "சுதந்திரம் வந்த பிறகு, காங்கிரசார், பேராசை பிடித்து பதவியைத் தேடி ஓடுகிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

"இந்தியாவை முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்றால், நாம் மிகவும் யோக்கியத் தன்மையுடன் இருக்க வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

"காங்கிரசாரிடையே ஏற்பட்டிருக்கிற மோதுதல் மாநிலங்கள் மத்தியில் மட்டும் அல்ல; ஒரு கிராமத்திற்குள்ளேயும் அடிதடிகள் நடைபெறும் அளவில் இருக்கின்றன" என்று அவர் எடுத்துக் காட்டினார்.

"நாம், காங்கிரசின் அடிப்படை உண்மையான ஒற்றுமை என்பதை மறந்துவிட்டோம்," என்றார் அவர்.

"காங்கிரசாரிடையே கட்டுப்பாடான நடத்தை காணப்படுவது அவசியம்; பாராளுமன்றத்திற்கான தேர்தலில் காங்கிரஸ் தோழர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்; சட்டசபை, நகராட்சி மன்ற தேர்தல்களிலும்கூட அப்படித்தான் நடைபெற்றிருக்கிறது.

இந்த இழிதன்மைகள் மாற்றப்படாவிடில், காங்கிரசின் மதிப்பு மக்களிடையே குறைந்துபோகும்" என்று அவர் எச்சரித்தார்.

"காங்கிரசில் இப்போது உண்மை ஊழியர்களுக்கு இடமேயில்லை; இந்த அவலநிலைமாற வேண்டும்; யாரிடம் பணம் குவிந்து கிடக்கிறதோ அவர்கள்தான் இப்போது காங்கிரஸ் நிறுவனத்தில் வலிவு பெற்று, தேர்தல்களில் இடம் பெறுகின்றனர்; இதன் காரணமாக, காங்கிரசில் உள்ள ஏழைகள் மூலையிலே தள்ளப்பட்டுவிடுகின்றனர்; 'பணம் படைத்தவனுக்கே பதவி' என்ற நிலைமை காங்கிரசில் இருப்பது கூடாது,"

என்று அல்குராய் சாஸ்திரி என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த காளிபாத முகர்ஜி என்பவர் தீர்மானத்திற்கு சிறு திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்து பேசுகையில், காங்கிரஸ் டெலிகேட்டுகள் தேர்தலில் ஏராளமான ஊழல்கள் நடைபெற்றதாகக் குறிப்பிட்டார். "ஒரு மாநிலத்தில் காங்கிரஸ் ஊழியர்களுக்கு மதுபானம் அளிக்கப்பட்டது," என்றார் அவர்.

"மேற்கு வங்கத்திலா மதுபானம் கொடுத்து 'ஓட்டு' வாங்கினர்?" என்று மௌலானா ஆசாத் கேட்டார்.

"இல்லை; பீகாரில் தான் அப்படிச் செய்தார்கள்," என்று முகர்ஜி பதில் அளித்தார்.

திருமதி மாயாபானர்ஜி பேசுகையில், "இப்போது ஒவ்வொரு காங்கிரஸ் ஊழியரின் நடத்தையும் கீழ்த்தரமான தாகிவிட்டது" என்று குறிப்பிட்டார்.

விவாதத்திற்கு இடையே குறுக்கிட்டுப் பேசுகையில், பண்டித நேரு, இத்தீர்மானம் மிகவும் அவசியமென்றும், அல்குராய் சாஸ்திரி கூறியது முழுவதும் உண்மைதான் என்றும், 'காங்கிரஸ், ஊழல் மயமாகிவிட்டது,' என்பது, 'ரூபாய்க்குப் பதினாறு அணா' என்பது போன்ற மறுக்க முடியாத உண்மையாகுமென்றும் குறிப்பிட்டார்.

'இப்போது காங்கிரசிற்குள் நிலவும் சூழ்நிலை பரிசுத்தமானதாக இல்லை; நான் இதைச் சவால் விட்டுச் சொல்கிறேன்; நான் காங்கிரசின் தலைவனாக இருந்திருக்கிறேன்; நிலைமை எனக்கு நன்றாகத் தெரியும்; காங்கிரசில், கண்ணியமற்ற தன்மை ஏராளமாக நிரம்பிக் கிடக்கிறது. இந்த நிலைமைக்கு மிகப் பெரிய காங்கிரஸ் தலைவர்கள்கூட காரணமாக இருக்கிறார்கள்; உண்மையை நாம் மறைக்கக் கூடாது; நாம் என்ன, முகத்தை மூடிக்கொண்டு வாழ முடியுமா?" என்று நேரு கேட்டார்.

"தீர்மானத்தின் மீது நடைபெறும் விவாதத்தின்போது வெளியாகும் காங்கிரஸ் ஊழல்கள் நாட்டு மக்கள் மத்தியில் காங்கிரசின் மதிப்பைக் குறைக்கும் தன்மையுடையன" என்று பலர் கூறியுள்ளனர்.

"மேற்கொண்டு விவாதம் நடைபெறுவது நல்லதல்ல," என்று கருதி, தலைவர் தேபர் விவாதத்தை இத்துடன் முடிக்கவேண்டுமென்று கூறி, பம்பாய் உறுப்பினர் பி. என். சின்னாய் கொண்டுவந்த தீர்மானத்தை முடித்துவிட்டாராம்.

வெளியே பயிரை மேய்கிறது

பம்பாய் நகர போலீஸ் அதிகாரி ஒருவரும், அவருடன் இரண்டு போலீஸ் கான்ஸ்டபிள்களும் வழிப்பறி செய்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டு அந்தேரியிலிருக்கும் மாநில மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

கடந்த செவ்வாயன்று இரவு, ஜுஹு கடற்கரையில் ஒரு பாகிஸ்தானியையும், அவரது மனைவியையும் நிறுத்தி வழிமறித்து, அவர்களிடமுள்ள ரூ. 2,000 ரொக்கத்தையும் அபகரித்துக் கொண்டனராம்!

இம்மூவரையும் ஜாமீனில் விட மறுத்து, மாஜிஸ்திரேட், பிப்ரவரி 3-ந் தேதி வரைக்கும் போலீஸ் பாதுகாப்பில் வைத்திருக்க உத்தரவிட்டிருக்கிறார்.

இவர்களுடன் சேர்ந்து வழிப்பறி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட மற்ற இரண்டு பேர் மீதும் மாஜிஸ்திரேட், 'வாரண்ட்' உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

புதுவையில் இரா. நெடுஞ்செழியன்

15—1—55 மாலை 6-30 மணிக்குப் புதுவை ஒதியஞ்சாலை மைதானத்தில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'நமது குறிக்கோள்' என்னும் பொருள்பற்றி உணர்ச்சியைத் தூண்டும் வகையில்—சிந்தனையைக் கிளறும் முறையில், மிகத் தெளிவாக 2½ மணி நேரம் பேசினார்.

கூட்டத்திற்கு உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், பெண்மக்கள் உட்பட சுமார் 8000 பேர்களுக்கு அதிகமாக வந்திருந்தனர். கூட்டம் முடியும்வரை மக்கள் கலைந்து செல்லாமல், மிக்வும் ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

தோழர் நெடுஞ்செழியன் அவர்கட்கு கழகச் சார்பிலும், கிளைக் கழகங்கள் சார்பிலும், ஆதரவுக் கழகங்கள் சார்பிலும், அந்தந்த ஊர் தி.மு.கழகத் தோழர்கள் சார்பிலும், மில் தொழிலாளர் சார்பிலும் ஏராளமான மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டதோடு, வரவேற்பிதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

தலைவர், தம் முன்னுரையில் அரசியலிலுள்ள குறைகளையும், அரவிந்த ஆசிரமத்தின் அடாத செயல்களையும் எடுத்துக் கூறியதை மக்கள் மகிழ்வுடன் வரவேற்றனர்.

மார்வாரி வகுப்பினர்களிடையே கோவில் ஆதிக்க வெறி

பகவானுக்குப் பூஜை போடுவதில் பக்தர்களிடையே தகராறு

ஷோலாப்பூர், ஜன. 20—லட்சுமி நாராயணன் கோவில் என்று ஒன்றுள்ளது இங்கு!

அந்தக் கோவில் பூஜையை யார் நடத்துவது என்பதில் மார்வாரி வகுப்பைச் சேர்ந்த இரு பிரிவினரிடையே தகராறு மூண்டது!

மகேஷ்வரி மார்வாரி வகுப்பைச் சேர்ந்த 'பட்கல்', 'திங்கல்' என்ற அந்த இருபிரிவினரும் தாங்களே அந்தக் கோவில் பூஜையை நடத்துவோம் எனக் கோரிவருகின்றனராம்.

சுமார் 65 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அந்தக் கோவிலின் நிர்வாகம், ஒரு 'திங்கல்' குடும்பத்தாரிடம் இருந்துவருகிறதாம்.

இப்போது, 'பட்கல்' வகுப்பினர், தங்கட்கும் அந்தக் கோவிலில் பூஜை செய்யும் உரிமை இருப்பதாகக் கோருகின்றனராம்.

"இத்தகராறு, மக்களின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடும்," என்று நகர போலீஸ் அதிகாரி, நகர துணை நீதிபதிக்கு அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், அதன் பேரில், நீதிபதி, 'பட்கல்' வகுப்பினர் தற்காலிகமாக அந்தக் கோவிலில் பூஜை நடத்தக் கூடாதென்று உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரிகிறது.

23 வயதுக்குள் திருமணம் செய்துகொள்ளாதே!

சர்க்கார் ஊழியர்களுக்கு பீகார் அரசாங்கம் உத்திரவு

பாட்னா, ஜன. 20—பீகார் மாநிலத்தில், சில குறிப்பிட்ட சர்க்கார் உத்தியோகங்களிலிருப்பவர்கள் 23-வயதுக்குள் திருமணம் செய்துகொள்ளக் கூடாதென்ற தடையுத்தரவு ஒன்றை சர்க்கார் பிறப்பித்துள்ளதாம்.

சில உத்தியோகங்களுக்கு, 23-வயதிற்குள் திருமணம் செய்துகொண்டிருந்தால், அவர்கள் 'தகுதியற்றவர்'கள் என்று கருதப்படுவார்களாம்.

அந்த குறிப்பிட்ட சில உத்தியோகங்களில் அமருபவர்கள் 23-வயதிற்குப் பின்னும் சர்க்காரின் முன் அனுமதியின்றி திருமணம் செய்துகொள்ளக் கூடாதாம்.

இந்த உத்தரவை மீறுபவர்கள் உத்தியோகத்தினின்றும் விலக்கப்படுவார்கள் என்றும் அந்த உத்தரவு கூறுகிறது.

இம்மாதிரி தடைகள் விதிப்பதற்குக் காரணம், 'சர்க்கார் நடவடிக்கைகள் இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கிற கிராமப் புறங்களில் கல்வி, மருத்துவம் குடியிருப்பு வசதிகள் மிகக் குறைவாக இருப்பதாலும் அங்கு திருமணமானவர்கள் குடும்பத்துடன் வசிக்கப்போதுமான வசதிகள் இல்லையென்று சர்க்கார் கருதுவதும் தான் என்று தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

★

அறந்தாங்கி

வ. உ. சி. திடலில் (தேரடி)

22—1—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்

★

ஆம்பூர் (வ. ஆ.)

கடைவீதி

முகமதலி மைதானத்தில்

23—1—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

ஈ. வெ. கி. சம்பத்

★

திருநள்ளாறு

திருஞான சம்பந்தர் பார்க்கில்

23—1—55 மாலை 3 மணிக்கு

பேசுவோர்:

தில்லை-வில்லாளன்

க. அறிவழகன்

★

புதூர்பாளையம்

தி. மு. கழக துவக்க விழா

காளியம்மன் கோயில்

முன்னிலையில்

பேசுவோர்:

மு. வசனப்பித்தன்

அ. தம்புச்சாமி

அதியமான்

செங்குட்டுவன்

கே. கே. சாமி

★

திண்டுக்கல்

வ. உ. சி. திடலில்

23—1—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: என். தங்கவேலன்

பேசுவோர்:

கே. எஸ். சந்தானம்

பி. சமதர்மம்

★

கீழ்மணலூர்பேட்டை

தி. மு. கழக ஆண்டு விழா

23—1—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: செல்வராசு

பேசுவோர்:

மணி எழிலன்

அன்புசாமி

கண்ணுச்சாமி

சென்னை 23-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

23—1—55 காலை 10 மணிக்கு, சென்னை, புரசை, எண். 17, அரசப்ப முதலி தெருவில், சென்னை 23-வது வட்ட தி. மு கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

23—1—55 காலை 10 மணிக்கு, சென்னை, முத்தியாலுப்பேட்டை முத்தமிழ் மன்றத்தில், தோழர் இரா. தியாகராசன் தலைமையில் 'நூலும்-கோலும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

பம்மல் தமிழர் மன்றம்

பொங்கல் விழா பொதுக்கூட்டம் 23-1-55 மாலை 5-30 மணிக்கு, பல்லாவரத்திற்கடுத்த பம்மல் மந்தவெளிக்கருகில், பம்மல் தமிழர் மன்றத்தின் சார்பில் பொங்கல் விழா பொதுக் கூட்டம் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் எம். கே. நவநீதம், ஏ. எல். பாருக்கி ஆகியோர் பேசுவர்.

பொங்கல் விழா

22—1—55 மாலை 6 மணிக்கு, சென்னை, அண்ணா பிள்ளை தெரு, பிரம்ம சமாஜம் பள்ளியில், ஜார்ஜ் டவுன் நாடகக் குழுச் சார்பில் பொங்கல் திருநாள்—சிறப்பு விழா முத்தமிழ்நிகழ்ச்சிகளுடன் தோழர் சி. டி. டி. அரசு தலைமையில் நடைபெறும். இயல்: 'பொங்கல் திருநாள்' என்பது பற்றி தோழர்கள் சு. அமிர்தலிங்கனார், வி. முனுசாமி ஆகியோர் பேசுவர்; இசை: தோழியர் பி. வி. லலிதா குழுவினர்; நாடகம்: ஜார்ஜ் டவுன் நாடகக் குழுவினர் நடிக்கும் 'ராஜநர்த்தகி.'

* * *

22—1—55 மாலை 6 மணிக்கு, போளூர் பழைய பஸ் நிலையத்தில் அமைத்திருக்கும் சுந்தரம் பந்தலில் போளூர் திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் தோழர் ஏ.எல்.சி. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் பேசுவார்.

23—1—55 மாலை 6 மணிக்கு, தோழர் ஆ. கூத்தரசு தலைமையில் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசுவார்.

* * *

22—1—55 மாலை 5½ மணிக்கு, சென்னை, சூளை, அஷ்டபுஜம் ரோடு, 17-ம் எண் இல்லத்தில், மதி வளர்ச்சி மன்ற துவக்க விழாவும், பொங்கல் விழாவும் தோழர் டபிள்யூ. வில்லியம்ஸ் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், முகவை ஆர்.எஸ்.பாண்டியன், சைதை சம்மந்தம் ஆகியோர் பேசுவர்.

திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கம் (பம்பாய் கிளை)

23—1—55 மாலை 6½ மணிக்கு, பம்பாய், தாராவி வாழைக்கட்டவாடி மைதானத்தில், மேற்படி சங்கத்தின் முதல் ஆண்டு விழா தோழர் ம. ப. மந்திரமூர்த்தி தலைமையில் நடைபெறும். தோழர்கள் த. மு. பொற்கோ, சி. சிவகுருநாதன், எஸ். எஸ். அன்பழகன், சு. வள்ளிநாயகம் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,